அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை.
இல:- 10/99

எனது இல. IX/TU/18
அரசாங்க நிர்வாக, உள்நாட்டலுவல்கள் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு -07.
1999.03.24.........

எல்லா அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும்
மாகாண சபைகளின் தலைமைச் செயலாளர்களுக்கும்
திணைக்களத் தலைவர்களுக்கும்,
அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச் சட்டச் சபைகளின் தலைவர்களுக்கும்,

முழுநேர காலமாக தொழில் சங்க அலுவல்களுக்காக விடுவிக்கப்பட்ட உத்தியோகத்தர் ஒருவருக்கு சம்பளம் வழங்குதல் தாபன விதிக்கோவையின் XXV ஆம் அத்தியாயத்தின் 5ஆம் பிரிவைத் திருத்துதல்.

தொழில் சங்க அலுவல்களுக்காக முழு நேரகால அடிப்படையில் விடுவிக்கப்பட்டுள்ள ஒரு உத்தியோகத்தர் ஓய்வூதிய உரித்துடைய பதவியொன்றை வகிப்பாராயின் ஓய்வூதிய உதவு தொகையாக அவரின் சம்பளத்திலிருந்து 25% தொடர்புடைய சங்கத்தால் செலுத்த வேண்டியதில்லையென அரசு தீர்மானித்துள்ளது. அதன்படி தாபன விதிக் கோவையின் XXV ஆம் அத்தியாயத்தின் 5:1 ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப்பதிலாக பின்வரும் பந்தி பதிலீடு செய்யப்படுகிறது. "5:1 உத்தியோகத்தர் ஓய்வூதிய உரித்துடைய பதவியொன்றை வகிப்பவராக இருந்தாலும் சங்கத்தினால் ஓய்வூதிய உதவு தொகை செலுத்த வேண்டியதில்லை.

02. இவ் ஏற்பாடுகள் 1999,01.01 ஆந் திகதி தொடக்கம் செயற்படும்.

ஒப்பம்/ பி. ஏ. சேனாரத்ன
செயலாளர்
அரசாங்க நிர்வாக, உள்நாட்டலுவல்கள் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு.